# வேளாங்கண்ணி மாதாவுக்கு நவநாள் ஜெபம்




## முதல் நாள் ஜெபம்

அமலோற்பவ கன்னிகையே இறைவனின் மேலான படைப்பே, வல்லபமிக்கவர் பெருமை உள்ளவைகளை உம்மிடத்தில் செய்தருளினார் என்பது முற்றும் உண்மையே. அவர் பூமியை உண்டாக்கி அலங்கரித்தபொழுது, தண்ணீர் அனைத்தையும் கடலில் ஒன்றாகச் சேர்த்தது போன்று, எல்லா தேவ வரங்களையும், ஞான அழகையும், அருளையும் உம்மிடத்தில் நிறைத்து வைத்திருக்கின்றார். ஓ மனுக்குலத்தின் சிறப்பே! பூவுலகின் எழிலே! இறைவனின் ஆலயமே! பரிசுத்த தம திரித்துவத்தின் இன்பப் பூங்காவே! நீர் வாழ்க! வாழ்க!

ஆரோக்கியத் தாயே, புனித பாப்பரசருக்காகவும், திருச்சபைக்காகவும் கிறிஸ்துவின் எல்லா அடியார்களுக்காகவும் இறைவனிடம் மன்றாடுமாறு வேண்டுகின்றோம். சிறு குழந்தைகளை பாதுகாத்து ஆன்ம வாழ்வையும், அறிவையும், ஆரோக்கியத்தையும் அளித்திட வேண்டியவள் நீரல்லவோ!

வாலிபர் பாவச் சோதனைகளில் சிக்கிக் கொள்ளாமல், அருள் வாழ்வில் நிலைத்து, அறநெறியில் நடந்திட அருள் கூர்ந்திடும் பரிசுத்த தாய் நீரன்றோ!

கன்னிப் பெண்கள் தங்கள் அணிகலனான கற்பினைக் களங்கம் ஏற்படாமல் காத்திட

வரமளித்திடும் கற்பின் அரசி நீரல்லவோ!

குடும்பப் பெண்கள் தங்கள் மாங்கல்ய மாட்சியை மங்காமல் காத்திட உதவிடும் தாவீது குலச்செல்வி நீரல்லவோ!

தாய் தந்தையர்களுக்கு எடுத்துக்காட்டு நீர்; விதவைகளுக்கு ஆதரவு நீர்; விரத்தர்களுக்கு தஞ்சம் நீர்; எளியோர்களுக்கு செல்வம் நீர்; நோயாளிகளுக்கு ஆரோக்கியம் நீர்! மனத்துன்புறுவோருக்கு அடைக்கலமும் நீரன்றோ! அம்மா, உம்வழியாய் இறைவனை அன்பு செய்து, அவர் மகிமைக்காக வாழ்ந்திட எங்களுக்காக வேண்டிக் கொள்வீராக.

ஆரோக்கிய அன்னை பிரார்த்தனை….

<u>ஆரோக்கிய அன்னையிடம் நம் குடும்பத்தை ஒப்புக்கொடுக்கும் ஜெபம்.</u>

அருள் மழை பொழியும் ஆரோக்கிய தாயே / துன்பப்படுவோரின் துயர் துடைக்கும் தயைமிகு தாயே / இதோ அசைக்க முடியாத முழு நம்பிக்கையுடன் / உமது திருத்தலத்தில் கூடியுள்ளோம் / உமது வல்லமையுள்ள மன்றாட்டினால் / எங்களைக் காத்தருளும். நாங்கள் எவ்விதத் தவறிலும் / கேட்டிலும் விழாதபடி / எங்களை கரம்பிடித்து வழி நடத்தும் தாயே / எல்லாவற்றிற்கும் மேலாக இறையேசுவை அன்பு செய்யவும் / அவருக்காகவே வாழவும் எங்களுக்குத் துணை செய்வீராக! / ஏழைகளையும் / ஆதரவற்றவர்களையும் / அன்புடன் அரவணைக்கும் அன்னையே / எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவோடு ஒன்றித்திருக்கின்ற நீர் / சக்திமிக்கவளாய் இருக்கின்றீர் அம்மா / நாங்கள் கேட்பதைத் தட்டாமல் தருகின்ற அன்புத் தாயே / துன்பத் துயரங்களிலுருந்து எங்களை விடுவித்தருளும் / வறுமையில் வாடும் எங்கள் வாழ்வை வளமாக்கும். / அமைதியின்றி அலையும் எங்களுக்கு ஆறுதல் தாரும். / வாழ்வதற்கு அறியாது வருந்தும் எங்களுக்கு / வாழ வழிகாட்டும் / எங்கள் குடும்பங்களையும், தொழிலையும், ஆசீர்வதித்து பாதுகாத்தருளும் தாயே. ஆமென்.

——✻✻✻✿✻✻✻——

<u>இரண்டாம் நாள் ஜெபம்</u>

தாவீது குலத்தின் மாணிக்கச் சுடரே, யூத மகளிரின் சோதிக் கதிரே, எளிய பாவிகளாகிய நாங்கள் உம் அன்பையும், மாட்சியையும் கண்டு வியப்படைகிறோம். அலகையின் ஆட்சியை வீழ்த்திட அமலோற்பவ திருக்குழந்தையாகப் பிறந்தீர்.

இருளின் பிடியில் மருளும் மனுகுலத்தோருக்கு கிறிஸ்துவின் ஒளிவீசிடச் செய்தீர். மருள் நீக்கி அருள் வாழ்வை அனைவருக்கும் அளித்திட வேளாங்கண்ணித் திருத்தலத்தில் வீற்றிருக்கின்றீர்.

ஓ! பேருபகார அன்னையே, மாசில்லா கன்னிகையே, பாவச்சுமையால் வாடும் நாங்கள் உம்மிடம் புகலிடம் தேடி ஒடி வருகின்றோம்; ஆழ்ந்த நம்பிக்கையோடு உம்மை அழைக்கின்றோம். உம் திருப்பெயரை பக்தியுடன் நாவினிக்கப் புகழ்கின்றோம்.

ஓ மரியே, தயாள தாயே, விமலனின் அமலியே, எங்களுக்கு ஆன்ம நலமருளும்; தூய்மை வழிநடத்தும்; பாவம் சூழ்ந்த இருள் அகற்றி, கிறிஸ்துவின் ஒளியை எங்கள் உள்ளத்தில் ஏற்றும். உடல் நலமும் அளித்திட வேண்டுகின்றோம் அம்மா.

ஆரோக்கிய அன்னை பிரார்த்தனை….
அருள் மழை பொழியும் ஆரோக்கிய தாயே…

——✻✻✻✿✻✻✻——

மூன்றாம் நாள் ஜெபம்.

எங்கள் நேசத்துக்குரிய மாதாவே, நீரே புனித வாழ்வின் மேலான எடுத்துக்காட்டு. நீர் வாழ்க! இளமையில்தானே உலகின் இன்பத்தைத் துறந்தவளாய், பெற்றோரையும் தனிமையில் விட்டுவிட்டு ஆலயத்தில் உம்மைக் கடவுளுக்கே உரிய காணிக்கையாக அர்ப்பணித்தீர்.

கிறிஸ்துவில் புதுவாழ்வு பெற்ற நாங்களோ உடல், உலகம், அலகை இம்மூன்றையும் விட்டுவிட்டதாக வாக்களித்தோம். ஆனால் பலமுறை தவறினோம். வாக்குறுதியை மீறி குற்றங்கள் பல புரிந்தோம். உலக இன்பத்தையே நாடி அலைந்தோம். நிலையான் விண்ணகப் பேரின்பத்தை மறந்தோம். சிலுவையில் அன்பின் செம்மலாக மீட்பின் ஆயராகப் பலியான இயேசுவை பாவ வாழ்வால் பரிகசித்தோம்; இகழ்ந்து ஒதுக்கினோம்.

கருணையே உருவான இறைவனின் அமல அன்னையே, எங்கள் பாவ நிலையை உணர்ந்து வருந்துகிறோம். அவல நிலை நின்று எங்களைக் காத்திட வேண்டுகிறோம். இறைவனை நிந்தித்த எங்களுக்கு மன்னிப்பைப் பெற்றுத் தரும் பேருபகாரத்தாய் நீரல்லோ. அருளை இழந்து இருளில் அலைந்து திரியும்

எங்களுக்கு உம் அன்புக்கரங்களை நீட்டியருளும்; இயேசுவின் இதய ஊற்று நீரைப்பருகி இறைவனின் புனித மக்களாக வாழ்ந்திட அருள் புரிந்தருளும்.

ஆரோக்கிய அன்னை பிரார்த்தனை….
அருள் மழை பொழியும் ஆரோக்கிய தாயே…

——✻✻✻✿✻✻✻——

நான்காம் நாள் ஜெபம்

ஓ! தூய அன்பின் அன்னையான புனித ஆரோக்கிய கன்னிகையே, நீர் இயேசுவின் தாய் என்பது பற்றி மிக்க பெருமை கொள்கிறோம். உம்மை உள்ளத்துடன் ஏற்றி போற்றி வாழ்த்துகின்றோம். இறைத்தூதர் அறிவித்த நற்செய்தியை தாழ்ச்சி உள்ளத்துடன் ஏற்றுக்கொண்டீர் என்பதை நாங்கள் பக்தியுடன் தியானிக்கிறோம்.

அருள் நிறைந்த மரியே வாழ்க! நீர் இறைமகனை கருவாக உம் திருவயிற்றில் ஏந்திய நேரமுதல் , உம் புகழ் விண்ணோக்கி வளர்ந்தது. வரங்களும் அருளும் உம்மில் நிறைந்திட நீர் இறைவனின் தாயானீர். பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பெற்றவள் நீரே. கிறிஸ்துவில் நீர் பெற்ற புது வாழ்வில் நாங்களும் பங்குகொண்டு அருள் நிறைந்தவர்களாக, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும். உமது தாழ்ச்சியைக் கண்ட விண்ணக அரசர் உம்மில் மனிதனானார். உமது நிகரில்லா கற்பின் மணம் கமழப் பரிசுத்த ஆவி உம்மீது எழுந்தருளினார்.

ஓ! கருனை நிறைந்தவளே, உம்மில் இறைவன் ஒன்றித்ததுபோல, திருவருட்சாதனங்களின் வழியாக நாங்களும் அவருடன் ஒன்றித்து வாழ எங்களுக்காக மன்றாடுவீராக.

ஆதித்தாயின் தீவினையால் சபிக்கப்பட்ட மனுக்குலம் உம்வழியாக ஆசீர்பெற்றுள்ளது. ஓ! மாதர்களின் மாணிக்க ஒளிச்சுடரே, தாய்மார்களின் தூய இரத்தினமே, சுந்தரவதிகளின் சுந்தரியே, எல்லாத் தலைமுறைகளும் உம்மைப் பேருடையாள் என்று போற்றுமே. உம்மைப் பணிந்து வாழ்த்துகின்றோம். தாயே எங்களை உம் அன்புக் கரங்களால் ஆசீர்வதித்தருளும்.

ஆரோக்கிய அன்னை பிரார்த்தனை….
அருள் மழை பொழியும் ஆரோக்கிய தாயே…

——✻✻✻✿✻✻✻——

ஐந்தாம் நாள் ஜெபம்.

களங்கமற்ற ஆரோக்கிய கன்னிகையே! இறைவனின் கொடைகளைப் பெற்றுத் தரும் பேருபகாரியே வாழ்க! புனித எலிசபெத்தம்மாள் வீட்டில் நீர் தங்கியிருந்தபோது அவ்வீட்டாருக்கும் ஸ்நாபக அருளப்பருக்கும் எத்தனையோ நன்மைகள் கிடைக்கச் செய்தீர். வேளாங்கண்ணித் திருத்தலத்தில் வீற்றிருக்கும் நீர் எங்களுக்குத் தேவையான எல்லா நன்மைகளையும் பெற்றுத் தாரும். உமது தயவால் இத்திருத்தலத்தில் பார்வை பெற்றோரும், செவியின் நலம் பெற்றோரும், ஆரோக்கியம் அடைந்தோரும், பாவ வழி விட்டு மனந்திரும்பினோரும் ஆறுதல் அடைந்தோரும் எத்தனையோ பேர்!

ஓ ! தயை நிறைந்த தடாகமே! இரக்கத்தின் திரு உருவே, மனித குலத்துக்கு நீர் செய்துள்ள பேருபகாரங்களுக்கு வணக்கத்துடன் நன்றி கூறுகிறோம். உம்மை உயர்த்திய எல்லாம் வல்ல இறைவனைப் பணிந்து ஆராதிக்கிறோம். எங்களுக்காக என்றும் இறைவனிடம் மன்றாட வேண்டுகிறோம்.

கன்றை அறியா பசுவில்லை. சேயை அறியாத் தாயில்லை! நீர் மனுக்குலத்தின் தாயாக உள்ளீர். உம் மக்களாகிய எங்கள் அனைவரையும் உம் அன்புக் கரங்களில் வைத்துக் காத்தருளும். மேலும் கிறிஸ்துவை நிராகரித்தவர்களும் ,அவரை அறியாதவர்களும், பாவ வழியில் வாழ்பவர்களும் மனந்திரும்பி இறைவனை அடைய வேண்டிக்கொள்ளும்.

ஆரோக்கிய அன்னை பிரார்த்தனை….
அருள் மழை பொழியும் ஆரோக்கிய தாயே…

——✻✻✻✿✻✻✻——

ஆறாம் நாள் ஜெபம்.

இறைமக்களால் போற்றப்படும் அமல ஆரோக்கிய அன்னையே, உமது நிகரற்ற புகழினை எடுத்துரைக்க எவரால் இயலும் ? மனுவான இறைவன் உம்

வழியாகவன்றோ உலகிற்கு மீட்பளித்தார். என்றும் கன்னிமைக்குப் பழுதின்றி கடவுளின் தாயாக விளங்குகின்றீர். உம்மை வாழ்த்துகின்றோம்.

ஓ ! விண்ணகத்தில் வீற்றிருக்கும் எங்கள் இன்பமே. இறை ஒளியை அள்ளி வழங்கிடும் குளிர் நிலமே, உண்மை வழிகாட்டும் விண்மீனே, உம் கரங்களில் தவழும் அன்புக் குழந்தையை ஆராதித்து, உம்மை வணங்குகிறோம். இயேசு எங்களின் அரசர். நீர் எங்களின் அரசியாயிருக்கிறீர்; அவர் எங்களின் ஆண்டவர், நீர் எங்களின் மாதாவாயிருக்கிறீர். விண்ணக தந்தைக்கும் மனிதருக்கும் இடையே நடுவராயிருக்கிறார் கிறிஸ்து. உமது திருமகனுக்கும் எங்களுக்கும் இடையே நீர் நடுவராக உள்ளீர். இயேசு பரலோக வழியாக இருக்கிறார். நீர் அதன் வாயிலாக உள்ளீர்.

ஓ! பேறுபெற்ற இஸ்ராயேல் குலமகளே, அருளின் இருப்பிடமே, படைத்த இறைவனை எங்களின் மீட்பராக ஈன்றெடுத்தீர், உலகமே கொள்ள முடியாதவரை உமது திருவயிற்றில் தாங்கினீர். உயிர்களுக்கு உணவூட்டுகிறவருக்கு நீர் பால் ஊட்டி வளர்த்தீர். இதனாலன்றோ எல்லா தலைமுறைகளும் உம்மைப் பேருடையாள் என்று வாழ்த்துகின்றன. உம் திரு மகனிடம் எங்களுக்காகப் பரிந்து பேசும் அவரை அன்பு செய்து சேவித்து வாழ வரமருளும். அவரோடும், உம்மோடும் விண்ணகத்தில் முடிவில்லா இன்பமடைய அருள்தாரும்.

ஆரோக்கிய அன்னை பிரார்த்தனை….
அருள் மழை பொழியும் ஆரோக்கிய தாயே…

——✻ ✻ ✻ ✿ ✻ ✻ ✻——

ஏழாம் நாள் ஜெபம்.

இரக்கம் மிகுந்த தாயே, எங்கள் பாவங்களின் பொருட்டு நீர் இயேசுவுடன் அனுபவித்த வேதனை எவ்வளவோ கொடூரமானது! அதை நினைத்து ஆலைவாய் கரும்பென மனமுருகுகின்றோம்.

ஓ! கருணைக் கடவுளின் கன்னித் தாயே, நீர் சிந்திய கண்ணீர் யாவும் எங்களுக்கு அருட்சுனையாகப் பாயட்டும்; எங்கள் உள்ளத்தில் காணப்படும் தீய நாட்டங்களையெல்லாம் அகற்றி இறையன்பை வளர்க்கட்டும். அன்புத் தந்தைக்கு ஏற்ற பிள்ளைகளாக நாங்கள் வாழ்ந்திட எங்களுக்கு ஆசீர் அருளும்.

பரிசுத்த மாதாவே, எல்லா ஆபத்துகளிலுருந்தும் எங்களைப் பாதுகாத்தருளும். வேடனைக் கண்ட பறவை விண்ணிலே பறந்து மறைவது போலவும், புலியைக் கண்ட புள்ளி மான் புதருக்குள் பதுங்கி ஒளிவதுபோலவும், பாவிகளாகிய நாங்கள் உமது மாசற்ற திரு இருதயத்தில் அடைக்கலம் நாடி ஓடி வருகிறோம். எங்களை அரவணைத்து இறைவனிடம் அழைத்துச் செல்ல வேண்டுகிறோம்.

ஆரோக்கிய அன்னை பிரார்த்தனை….
அருள் மழை பொழியும் ஆரோக்கிய தாயே…

——✻✻✻✿✻✻✻——

எட்டாம் நாள் ஜெபம்.

ஓ! உன்னதக் கடவுளின் ஆலயமே, ஞானத்தின் இருப்பிடமே, நீர் வாழ்க, ஆதியில் அழியாத கேதுரு மரத்தினால் வாக்குத்தத்தப் பெட்டகம் செய்யப்பட்டு, உள்ளும் புறமும் தங்கத் தகடுகள் போர்த்தப்பட்டிருந்தது. அது போன்று உமது திரு உடல் அழியாமையைத் தரித்துக்கொள்ள இறைவனின் மாட்சி உம்மில் அணிகலனாக விளங்கிற்று. உம்மைக் கண்டு பூரிப்படைகிறோம். இறைவனுக்கு மகிமை உண்டாகுக என வாழ்த்துகிறோம்.

மாசும், குறையும் , கறையுமில்லாத அழகுத் திருவுருவே, மண்ணக வாழ்வின் இறுதியில் விண்ணகத்திற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட மாதாவே, வழிப்போக்கர்களாகிய எங்களை மறந்துவிடாதீர். ஒளியான இறைவனுடன் ஒன்றித்துள்ள விண்சுடரே. இருளில் வாழும் எங்களுக்கு ஒளியைப் பெற்றுத் தாரும். உலகம் என்ற கடலிலே படகு போன்ற எங்கள் அற்ப வாழ்வு ஆபத்தின்றி கரை சேர்ந்திட அருள்வீராக. சிலுவையினடியில், இயேசு எங்கள் அனைவரையும் உம் மக்களாக்கி ஒப்படைத்துள்ளார் அன்றோ! அன்புத் தாயே எங்களை ஆதரித்து காப்பாற்றியருள உம்மை மன்றாடுகிறோம். இம்மண்ணக வாழ்வில் ஆன்மத் தூய்மையும், உடல் ஆரோக்கியமும் பெற்றவர்களாய் விண்ணகத்தில் உம்மோடு என்றென்றும் இறைவனைப் போற்றிட வரமருள வேண்டுகிறோம்.

ஆரோக்கிய அன்னை பிரார்த்தனை….
அருள் மழை பொழியும் ஆரோக்கிய தாயே…

——✻✻✻✿✻✻✻——

ஒன்பதாம் நாள் ஜெபம்.

ஆரோக்கிய அன்னையே! இறைவனின் தாயான உம்மை வாழ்த்துகின்றோம். இறைவனின் புகழ்பாடும் படைப்புப் பொருட்கள் அனைத்தும் உம்மை வாழ்த்தும்படியாக அழைக்கின்றோம்.

கடவுளின் படைப்புக்களே, ஆரோக்கிய அன்னையைப் போற்றுங்கள். வானக அரசியைப் புகழ்ந்து பாடுங்கள். இறைவனின் தூதர்களே, ஆரோக்கிய அன்னையைப் போற்றுங்கள். வானகப் படைப்புக்களே விண்ணக அரசியைப் புகழ்ந்து பாடுங்கள். விண்ணகத்திலுள்ள புனிதர்களே, ஆரோக்கிய அன்னையைப் போற்றுங்கள். பகலோனே, நிலவே விண்ணக அரசியைப் புகழ்ந்து பாடுங்கள். வானத்தில் ஒளிர்கின்ற விண்மீன்களே, ஆரோக்கிய அன்னையைப் போற்றுங்கள். மழையே, பனியே விண்ணக அரசியைப் புகழ்ந்து பாடுங்கள். வெம்மையே , குளிரே ஆரோக்கிய அன்னையைப் புகழ்ந்து பாடுங்கள். மலைகளே , குன்றுகளே, பள்ளத்தாக்குகளே ஆரோக்கிய அன்னையைப் புகழ்ந்து பாடுங்கள். இருளே, ஒளியே ஆரோக்கிய அன்னையை வாழ்த்துங்கள். மேகங்களே , மின்னல்களே அரோக்கிய அன்னையைப் புகழ்ந்து பாடுங்கள். பூமிதனில் உள்ள விளைச்சல்களே ஆரோக்கிய அன்னையைப் போற்றுங்கள். சுனைகளே, மலையருவிகளே , நதிகளே ஆரோக்கிய அன்னையைப் புகழ்ந்து பாடுங்கள். கடலே, கடல்வாழ் உயிர்களே ஆரோக்கிய அன்னையைப் போற்றுங்கள். வானத்துப் பறவைகளே, தரைவாழ் உயிரினங்களே ஆரோக்கிய அன்னையைப் புகழ்ந்து பாடுங்கள்.

ஆரோக்கியத் தாயே புகழ்பாடும் உம் மக்களின் மன்றாட்டுக்களை அன்புடன் ஏற்றுக் கொள்ளும். நாங்கள் என்றென்றும் உம்மை எங்கள் தாயாக அன்பு செய்வோம். நாங்கள் ஆன்ம உடல் ஆரோக்கியம் நிறைந்தவர்களாக இறைவனின் அன்பில் நிலைத்து புனிதர்களாக வாழ்ந்திட , எங்களுக்காக உம் திரு மைந்தன் வழியாக் விண்ணகத் தந்தையிடம் மன்றாடுவீராக.

ஆரோக்கிய அன்னை பிரார்த்தனை….
அருள் மழை பொழியும் ஆரோக்கிய தாயே…

——✻✻✻✿✻✻✻——

# புனித ஆரோக்கிய மாதாவின் பிரார்த்தனை

ஆண்டவரே இரக்கமாயிரும்
கிறிஸ்துவே இரக்கமாயிரும்
ஆண்டவரே இரக்கமாயிரும்
கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.
கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டை நன்றாகக் கேட்டருளும்.

விண்ணகத்திலிருக்கிற தந்தையாம் இறைவா - எங்கள் மேல் இரக்கமாயிரும்
உலகத்தை மீட்ட சுதனாகிய இறைவா - எங்கள் மேல் இரக்கமாயிரும்
தூய ஆவியாகிய இறைவா - எங்கள் மேல் இரக்கமாயிரும்
தூய்மை நிறை மூவொரு இறைவா - எங்கள் மேல் இரக்கமாயிரும்

ஜென்மப் பாவமில்லாமல் உற்பவித்த புனித மரியே - எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்
உலகம் படைக்கப்படுமுன் சர்வேசுரனால் தெரிந்துகொள்ளப்பட்ட புனித ஆரோக்கிய மாதாவே - எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்
இன்பவனத்தில் ஆதிப் பெற்றோருக்கு அறிவிக்கப்பட்ட புனித ஆரோக்கிய மாதாவே
பாவ இருளை அகற்றுகிற ஞான ஒளியான புனித ஆரோக்கிய மாதாவே
விடிவெள்ளியென்று இறைவாக்கினரால் போற்றப்படும் புனித ஆரோக்கிய மாதாவே

மனுக்குலத்துக்கு அருள்மழை பெறுவிக்கும் மேகமான புனித ஆரோக்கிய மாதாவே
எல்லா நன்மைத் தனத்துக்கும் பாத்திரமான புனித ஆரோக்கிய மாதாவே
முதுபெரும் தந்தையரால் பரிசுத்தர் என்று அழைக்கப்பட்ட புனித ஆரோக்கிய மாதாவே
அகங்காரப் பேயின் தலையை மிதித்த புனித ஆரோக்கிய மாதாவே
இஸ்ராயேலரின் பதினாறு அரசகுலங்களுள் சிறப்புற்ற குலத்தில் உதித்த புனித ஆரோக்கிய மாதாவே

பேறுபெற்ற அன்னம்மாள், சுவக்கினின் திருமகளாய் பிறந்த புனித ஆரோக்கிய மாதாவே
அவர்களின் வேண்டுதல்களாலும், நற்செயல்களாலும் இறைவனின் அன்புக் குழந்தையா பிறந்த புனித ஆரோக்கிய மாதாவே
தூதர், புனிதர் அனைவருக்கும் மேலாக நிறைந்த அருள் ஒளியோடு பிறந்த புனித ஆரோக்கிய மாதாவே
படைப்புப் பொருள்கள் அனைத்திற்கும் மேலாக இறைவனுக்கு மகிமையளிக்கப்

பிறந்த புனித ஆரோக்கிய மாதாவே
விண்ணுலகும், மண்ணுலகும் போற்றிடும் அழகுடன் பிறந்த புனித ஆரோக்கிய மாதாவே

கடவுளின் கொடைகளையெல்லாம் பெறுவிக்கும் இறைகுலக் கொழுந்தான புனித ஆரோக்கிய மாதாவே
நித்தியமும் இறைவனின் திருமுன் தேர்ந்தெடுக்கப்பெற்றவளாக விளங்கிடும் புனித ஆரோக்கிய மாதாவே
தூய்மையின் வழியில் எல்லாப் புனிதர்களுக்கும் எடுத்துக்காட்டாக விளங்கும் புனித ஆரோக்கிய மாதாவே
பிறப்பின்போது விண்ணக ஒளியால் சுடர்விட்ட புனித ஆரோக்கிய மாதாவே
மனுக்குலத்தின் மகிழ்ச்சியாக விளங்கிடும் புனித ஆரோக்கிய மாதாவே

பிறந்தவுடன் விண்ணகத் தந்தைக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்ட புனித ஆரோக்கிய மாதாவே
உமது அழகுக்கேற்ப மரியென்னும் புதிய பெயர் சூட்டப்பெற்ற புனித ஆரோக்கிய மாதாவே
என்றும் கன்னியாக விளங்கும் புனித ஆரோக்கிய மாதாவே
ஆலயத்தில் அனைவருக்கும் ஆசிரியையாக நடந்து காட்டிய புனித ஆரோக்கிய மாதாவே
நோயுற்றோரின் துன்பத்தை அகற்றி நலமருளும் புனித ஆரோக்கிய மாதாவே
உம்மை நம்பினவர்களை ஒருபோதும் கைவிடாத பேருபகாரியான புனித ஆரோக்கிய மாதாவே
புனிதர்களின் விண்ணக முடியென விளங்கும் புனித ஆரோக்கிய மாதாவே

உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே - எங்கள் பாவங்களை பொறுத்தருளும்
உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே - எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்
உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே - எங்கள்மேல் இரக்கமாயிரும்

இறைவனுடைய புனித மாதாவே! இதோ உம்மிடம் சரணடைய ஓடி வந்தோம்! எங்கள் அவசரங்களில் நாங்கள் வேண்டிக்கொள்ளும்போது பாராமுகமாயிராதேயும். ஆசீர்வதிக்கப்பெற்றவளுமாய் விண்ணகத்திற்குரியவளுமாயிருக்கிற நித்திய கன்னிகையே எல்லா ஆபத்துக்களினின்றும் எங்களைப் பாதுகாத்தருளும்.

ஒரு: இயேசுகிறிஸ்துவின் வாக்குறுதிகளுக்கு நாங்கள் தகுதியுள்ளவர்கள் ஆகும்படி
எல்: இறைவனின் தூய அன்னையே எங்களுக்காக மன்றாடும்

செபிப்போமாக:

விண்ணகத் தந்தையே, பரிசுத்த கன்னிகையாகிய புனித மரியாளை எல்லா அருட்கொடைகளாலும் அலங்கரித்து, உமது திருக்குமாரனைப் பெற்று அமுதூட்டி வளர்க்கும் தாயாக நித்தியந்தொட்டுத் தெரிந்துகொண்டீரே; அந்த உத்தம தாய் எங்களுக்காக மன்றாடிக் கேட்கும் விண்ணப்பங்களை நாங்கள் அடைந்து, வறுமை பிணி போன்ற துன்பங்களினின்று பாதுகாக்கப்படுவோமாக. அத்தாயின் வழியாக ஆரோக்கியமும் மகிழ்ச்சியும் பெற்றவர்களாய் தூய்மையின் வழி நடந்து விண்ணக முடியைப் பெற்றுக்கொள்ள அருள்கூர்ந்தருளும், எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்துவின் வழியாக உம்மை மன்றாடுகிறோம். - ஆமென்.

——✻✻✻✿✻✻✻——